ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 444)   Jun (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 264)

90. த்விப்ரகாரம் து முத்ராணாம் ப்ரயோகம் வித்தி வாஸவ
அத்யாத்மம் ஸம்விதாகாரம் பாஹ்யம் வாக் கர்ம சித்தஜம்

பொருள் – இந்த்ரனேஇந்த முத்ரைகளை இரண்டு விதங்களில் ப்ரயோகம் ! .செய்யலாம்முதலாவது ஸம்வித்தின் ஆகாரமாக உள்ளிலும், அடுத்து சொல் செயல் மற்றும் மனம் மூலமாகப் புறத்திலும் ஆகும்.

91. அநேந விதிநா முத்ராம் யோ பத்நாதி விதாநவித்
தேநேதம் முத்ரிதம் ஸர்வமபுநர் பவஸித்தயே

பொருள் – யார் ஒருவர் பலவிதமான விதிகளுக்கு உட்பட்டுள்ள இந்த முத்ரைகளை, அந்தந்த விதிகளின்படி ப்ரயோகம் செய்கிறாரோ, அவர் மீண்டும் பிறவி எடுப்பதில்லை.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 409)

6-4-4. நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க இரங்கிற்றும் வஞ்சப் பெண்ணைச்
சாவப் பால் உண்டதும் ஊர் சகடம் இறச் சாடியதும்
தேவக் கோலப் பிரான் தன் செய்கை நினைந்து மனம் குழைந்து
மேவக் காலங்கள் கூடினேன் எனக்கு என் இனி வேண்டுவதே

பொருள் - திருமேனியானது துன்பம் அடையும்படியாக யசோதை உரலுடன் இறுக்கமாகக் கட்ட, அதற்கு ஈடுபட்டு நின்ற செயலும்; தாய் போன்று வடிவம் கொண்டு வஞ்சனையாக வந்த பூதனையை, அவள் இறக்கும்படியாக அவளுடைய ஸ்தனங்களில் பாலைப் பருகிய செயலும்; அஸுர ஆவேசம் கொண்டு ஊர்ந்து வரும் சக்கரமானது முறியும்படியாகத் திருவடிகளால் உதைத்த செயலும்; என்று இப்படியாக இந்த உலகில் காணக் கடைக்காத திருமேனி கொண்ட கிருஷ்ணனுடைய லீலைகளை எப்போதும் எண்ணி, எனது நெஞ்சும் நெகிழும்படியாக, மனம் அவனிடம் பொருந்தும்படியாக எனது காலமானது அமையப்பெற்றேன். இனி எனக்கு வேண்டியது என்ன உள்ளது?

அவதாரிகை – “ஆச்ரித பவ்யனான இருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனை யநுபவிக்கப் பெற்ற எனக்கு அவாப்தவ்யமுண்டோ?”, என்கிறார்.

விளக்கம் - “தன்னை அடைந்தவர்களுக்கு தான் மிகுந்த பவ்யனாக உள்ளபோதிலும், அத்தகைய இருப்பில் தனது விரோதிகளை அழித்த க்ருஷ்ணனை

அனுபவிக்கப் பெற்ற எனக்கு அடையத்தக்கது வேறு ஏதேனும் உள்ளதா?", என்கிறார்.

வ்யாக்யானம் - (நோவ ஆய்ச்சி உரலோடார்க்க இரங்கிற்று) சீயர் இப்பாட்டை இயலருளிச் செய்யப் புக்கால் "நோவ" என்றருளிச் செய்யும் அழகுகாணும். நோவவென்கிறார் காணும் ஆழ்வார், தம் திருமேனியிலே கயிறு உறுத்தினாப்போலே. (ஆய்ச்சி உரலோடார்க்க இரங்கிற்றும்) ஒரு த்வேஷமுண்டாய்க் கட்டுகிறாளல்லளிறே, ஸ்நேஹ கார்யமான கோபமாகையாலே ஸ்நேஹமுள்ளவளவும் இடைநிற்குமிறே கோபமும். "தாயெடுத்த சிறுகோலுக்குளைந்தோடி"யிறே, "விளியாவார்க்கவாப்புண்டு விம்மியழுதான்"; வாய் விட்டழமாட்டாததிறே இவரை வருத்துகிறது. (விளியாவார்க்க) கோபித்துக் கட்ட. (ஆய்ச்சியுரலோடார்க்க) "தறியார்ந்த கருங்களிறேபோலே நின்று தடங்கண்கள் பனிமல்குந் தன்மையானை" ஒரு மத்த கஜத்தைத் தறியோடே சேர்த்தாப்போலேகாணும் இவன் கட்டுண்டு நின்ற நிலை! ஓர் அபலை கட்டின கட்டு அவிழ்த்துக் கொண்டு போகமாட்டாதே, நின்றழுகையே ஸ்வபாவமாயிருந்தபடி. "யதி சக்நோஷி" என்றாளிறே. (உரலோடார்க்க இரங்கிற்றும்) உரலோடே கட்ட இரங்கிற்றும்; துர்யோநாதிகளுடைய பந்தமாகிறே அறுக்க விரகு சிந்திப்பது. (இரங்கிற்றும்) மாநஸ பீடையை அநுஸந்தித்தபடி. இரக்கம் - ஈடுபாடு.

விளக்கம் - (நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க இரங்கிற்று) - இந்த இடத்தில் "நோவ" என்ற சொல்லிற்கு நஞ்ஜீயர் அருளிச்செய்த அழகுதான் என்னே! அவர் அருளிச்செய்தது என்னவென்றால், "திருமேனியானது துன்பம் அடைந்தது என்கிறார் ஆழ்வார்; அதாவது தனது திருமேனியில் அந்தக் கயிறு கட்டப்பட்டது போன்று அனுபவிக்கிறார்", என்பதாகும். ஆனால் ப்ரியமான ஒரு தாய் அவ்விதம் துன்பம் அடையும்படியாகக் கட்டி வைப்பது ஏன் என்பதற்கு விடை அளிக்கிறார்; (ஆய்ச்சி உரலோடு ஆர்க்க இரங்கிற்றும்) - ஒரு கோபம் கொண்டு இவ்விதம் கட்டவில்லை. அன்பின் விளைவாக எழுந்த கோபம் என்பதால், அன்பு உள்ள அளவிற்குக் கோபமும் உண்டு என்கிறார். அல்லது, தாயானவள் மெல்லவே கட்டினாள் என்றாலும், அவள் தன்னிடம் காண்பித்த சிறிய கோபத்தைக் கூட பொறுக்க இயலாத காரனத்தால், மென்மையாகக் கட்டியதும் கூட துன்புறுத்துவதாக இவனுக்கு உள்ளது. பெரிய திருமொழி (8-3-5) - தாயெடுத்த

சிறுகோலுக்கு உளைந்து ஓடி – இதற்குப் பதுங்கி வளைந்து ஓடி அல்லவோ, பெரியதிருமொழி (6-7-4) – விளியா ஆர்க்க ஆப்புண்டு விம்மி அழுதான் – என்பதாக கட்டுண்டு நின்று விம்மி அழுதான். அதாவது வாய் விட்டு அழாதபடி இருந்த இவன் நிலை இவரை வருத்துகிறது என்று கருத்து. (விளியா ஆர்க்க) - கோபித்துக் கட்ட. இவன் வாய் விட்டு அழாமல் விம்மி அழுதான் என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; (ஆய்ச்சி உரலோடு ஆர்க்க) - பெரியதிருமொழி (2-10-6) – தறி ஆர்ந்த கருங்களிறேபோலே நின்று தடங்கண்கள் பனிமல்குந் தன்மையானை – ஒரு மதம் பிடித்த யானையைத் தறியுடன் சேர்த்துக் கட்டியது போன்று இவன் கட்டப்பட்டு நிற்கும் நிலை உள்ளது. ஒரு அபலை கட்டிய கட்டை அவிழ்த்துச் செல்லாமல் நின்று, அழுதபடி உள்ளதைத் தனது இயல்பாகவே கொண்டிருந்தான். அவிழ்த்துக் கொண்டு செல்லவில்லை என்பதற்கு ப்ரமாணம் ஸ்ரீவிபு (5-6-15) – யதி சக்நோஷி – சக்தி இருந்தால் அவிழ்த்துச் செல் - என்றாள். (உரலோடு ஆர்க்க இரங்கிற்றும்) - உரலுடன் கட்ட, இரங்கிக் கெஞ்சியபடி இருந்தான். ஆனால் எதற்காக இரங்கவேண்டும்? அவிழ்த்துச் செல்ல இயலாதோ என்றால், துரியோதனனால் கட்டப்பட்ட கயிறாக இருந்தால் அறுப்பதற்கு எண்ணியிருப்பான். (இரங்கிற்றும்) - மனத்தால் கட்டப்பட்ட கயிறாகவே அதனை எப்போதும் எண்ணினான்; இங்கு இரக்கம் என்பதற்கு, ஈடுபாடு என்று பொருள்.

வ்யாக்யானம் - (வஞ்சப்பெண்ணைச் சாவப்பாலுண்டதும்) கெட்டேன்! பேய்த்தாய் பக்கலிலும் அங்ஙனிருந்தானாகில் என்படக் கடவதுதான்? (சாவப் பாலுண்டதும்) சூர்ப்பநகியைப்போலே அங்கஹாநியைப் பண்ணிவிட்டுப் பூசலை விளைப்பியாதே முடித்து விடப் பெற்றபடி. (பாலுண்டதும்) யசோதைப்பிராட்டி முலையுண்ணும்போதும் தான் உயிர் பெற உண்ணுமாபோலேகாணும் இவள் முலையுண்கிற போதும் தான் உயிர் பெற முலையுண்டபடி. “பெருமுலையூடுயிரை வற்ற வாங்கியுண்டவாய”னிறே. இவன் பிள்ளையாயே முலையுண்டானத்தனை; வஸ்து ஸ்வபாவத்தால் ப்ரதிகூலர் முடிந்ததித்தனையிறே.

விளக்கம் – (வஞ்சப்பெண்ணைச் சாவப் பால் உண்டதும்) - ஆழ்வார் தனது மனதில், “கெட்டேன்! தனது தாயாகிய யசோதையிடன் இருந்தது போன்றே தாய் ரூபத்தில் வந்த பேயிடமும் இவன் இருந்தால் என்ன செய்வது, என்ன ஆகும்?”, என்றார். (சாவப் பால் உண்டதும்) - சூர்ப்பணகைக்கு ஏற்பட்டது போன்று உடலில் குறை உண்டாக்கி, அதன் மூலம் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தாமல், பூதனையை

முடித்தான். (பால் உண்டதும்) - யசோதையிடம் தாய்ப்பால் பருகிய நேரத்தில், தான் தனது உயிரைப் பெறுவதற்காகப் பருகினான்; அதனை போன்றே பூதனையிடம் பாலைப் பருகியபோது தான் அவள் உயிர் பெறுவதற்காகப் பாலைப் பருகினான். பெரியதிருமொழி (1-3-1) - பெருமுலையூடுயிரை வற்ற வாங்கியுண்ட வாயன் - என்பதாக உள்ளவன் அல்லவோ? இவன் குழந்தையாக இருந்து பாலைப் பருகினால் அவள் உயிர் போகுமோ என்றால், இவன் பிள்ளையாய் வந்து இவ்விதம் பாலைப் பருகினான்; அவ்வளவே செய்தான்; ஆனால் விரோதியாக உள்ள வஸ்துவின் இயல்பால் அவள் முடிந்தாள்.

வ்யாக்யானம் - (ஊர் சகடமிறச் சாடியதும்) ப்ரேரகர் வேண்டாதபடி தானே வந்து நலிந்தபடி. ஒரு மநுஷ்ய வடிவு கொண்டு வந்து நலியிறே பரிஹரிக்கலாவது. இத்தால் சொல்லிற்றாயிற்று ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக பாதகத்வத்தில் உறைப்புச் சொன்னபடி. (இறச் சாடியதும்) “தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாப் பிளந்து” என்று சொல்லக் கடவதிறே. (சாடியதும்) அநாயாஸேந திருவடிகளை நிமிர்க்கச் செய்தேயும், ஒரு முக்தனுடைய வ்யாபாரமாகையாலே போரப் பொலியச் சொல்லுகிறார். “பேர்ந்தோர் சாடிறச் செய்ய பாதமொன்றால் செய்த நின் சிறுச்சேவகமும்” என்னக் கடவதிறே.

விளக்கம் – (ஊர் சகடமிறச் சாடியதும்) - தன்னைத் தூண்டுபவர்கள் யாரும் தேவையில்லை என்னும்படி சகடாசுரன் தானாகவே வந்து துன்புறுத்தினான். பூதனை போன்று ஒரு மனித வடிவம் எடுத்து வந்தால் தடுக்கலாம். இதன் முலம் கூறப்பட்டது என்னவென்றால், வேறு உதவி ஏதும் இன்றி தானாகவே வந்து பாதகம் ஏற்படுத்தும்படியாக சகடாசுரனுடைய உறுதி இருந்தது என்பதாகும். (இறச் சாடியதும்) - அவன் முடிந்து போகும்படியாக உதைத்தான்; இதற்கு ப்ரமாணம் திருவாய்மொழி (6-9-4) - தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாப் பிளந்து - என்பதாகும். (சாடியதும்) - எந்தவிதமான கூடுதல் முயற்சியும் செய்யாதபடி மிகவும் எளிதாகத் தனது திருவடிக்ளை நிமிர்த்தியபோதிலும், ஒரு பாலனுடைய செயல் என்பதால் விரிவாகக் கூறுகிறார். திருவாய்மொழி (5-10-3) - பேர்ந்தோர் சாடிறச் செய்ய பாதமொன்றால் செய்த நின் சிறுச்சேவகமும் - என்பது காண்க.

வ்யாக்யானம் - (தேவக்கோலப்பிரான்) ப்ராக்ருத ஸஜாதீயனாய் நின்று செய்யவும் பெற்றதில்லையே. அதிபால்யத்திலே செய்த செயலாகையாலே அப்ராக்ருதமா யிருப்பதோர் ஒப்பனை போலேயிருக்கிறபடி. அப்ராக்ருதமான அழகை எனக்கு உபகரித்தவன். கோலம் - ஒப்பித்த விக்ரஹம். (தன் செய்கை நினைந்து மனங்குழைந்து மேவக்காலங்கள் கூடினேன்) அவனுடைய சேஷ்டிதங்களை யநுஸந்தித்து அகவாயுடை குலைப்பட்டு அநந்யப்ரயோஜநனாய்க் கொண்டு காலம் போக்கப்பெற்றேன். நெஞ்சு நெகிழ்ந்து சேஷ்டிதங்களோடே பொருந்தும்படி காலங்களைக் கூடப்பெற்றேன். (எனக்கென்னினி வேண்டுவதே) இனி அவாப்தவ்யமொன்றில்லை யென்கிறார்.

விளக்கம் - (தேவக்கோலப்பிரான்) - மனிதர்கள் போன்ற செயலைச் செய்யவும் காணப்பெறவில்லை. மிகவும் சிறிய வயதில் செய்த செயல்கள் என்பதால் இது இந்த உலகில் இல்லாத ஒப்பனை போன்று உள்ளது. இந்த உலகில் இல்லாத அழகை எனக்குக் காண்பித்து உதவியவன். கோலம் என்றால் ஒப்பனையுடன் கூடிய திருமேனி. (தன் செய்கை நினைந்து மனங்குழைந்து மேவக்காலங்கள் கூடினேன்) - அவனுடைய லீலைகளை எண்ணியபடி, நெஞ்சம் உள்நெகிழ்ந்து, வேறு எதனையும் எதிர்பார்க்காமல் இருந்து, எனது காலம் கழியப்பெற்றேன். எனது நெஞ்சம் நெகிழ்ந்து அவனுடைய லீலைகளுடன் பொருந்தும்படியாக எனது காலம் கைகூடப் பெற்றேன். (எனக்கு என் இனி வேண்டுவதே) – இனி எனக்கு அடையப்படவேண்டியது வேறு ஏதும் இல்லை என்கிறார்.

6-4-5. வேண்டித் தேவர் இரக்க வந்து பிறந்ததும் வீங்கு இருள் வாய்
பூண்டு அன்று அன்னைப் புலம்ப போய் அங்கு ஓர் ஆய்க்குலம் புக்கதும்
காண்டல் இன்றி வளர்ந்து கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும்
ஈண்டு நான் அலற்றப் பெற்றேன் எனக்கு என்ன இகல் உளதே

பொருள் - தேவர்களுடைய வேண்டுதல் நிறைவேறுவதற்காக, தனது விருப்பத்தின்படி திருப்பாற்கடலிருந்து இங்கு வந்து அவதரித்ததும்; அப்போதே பெற்ற தாயாகிய தேவகியானவள் கம்ஸன் மீது கொண்ட பயத்தால் எடுத்து அணைத்துக் கொண்டு புலம்ப, அடர்ந்த இருளில் கம்ஸனுக்கு ஆளுகைக்கு உட்பட்டு இருந்தபோதிலும், அவனிடம் அச்சம் கொள்ளாமல் மறைத்து வைத்து நோக்கும்படி வேறு இடம் இல்லை என்னும்படி உள்ள திருவாய்ப்பாடியில் புகுந்தும்; அந்தக் கம்ஸனுடைய காட்சியே இல்லாதபடி அந்தக் கம்ஸன் முடிந்து போகும்படியாக வஞ்சனை மிக்க செயல்களைச் செய்ததும்; இப்படியாகப்

பலவற்றையும் நான் இப்போது இங்கு இருந்தபடி எனது வாய் விட்டு கூறப் பெற்றேன். இதில் என்ன விரோதம் உள்ளது?

அவதாரிகை – "அவதரித்து கம்ஸனையறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்று இருந்தநுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரெதிரில்லை" யென்கிறார்.

விளக்கம் – "இங்கு அவதரித்து, கம்ஸன் அறியதபடியாக வளர்ந்து, அவனை வீழ்த்திய விதங்களை இன்று இங்கு இருந்து நான் அனுபவிக்கப்பெற்றேன். எனக்கு யாரும் எதிர் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (வேண்டித் தேவரிரக்க வந்து பிறந்ததும்) தேவரிரக்க வேண்டி வந்து பிறந்ததும். "எங்களளவறியாதே ஒருவனுக்கு வரங்கொடுத்து அவனையுயரப் பார்த்தோம்; எங்களுக்குக் குடியிருப்பு அரிதாயிற்று" என்று தேவஜாதி கப்படங் கட்டிக் கொண்டு செல்ல, "பிதரம் ரோசயாமாஸ" என்கிறபடியே தான் அர்த்தியாய் வந்து பிறந்ததுவும். "ஆத்ம மாயயா" என்னும்படியிறே; ஆத்மேச்சயா என்றபடி; "மாயா வயுநம் ஜ்ஞாநம்". இரக்கிறவர்களளவு பார்த்தல், தன்னளவு பார்த்தல் செய்கையன்றிக்கே வந்து பிறந்தபடி காணும், இவரை வருத்துகிறது. தான் இரப்பாளனாய்க் காரியஞ் செய்யுமவன், பிறர் பிறந்தால் பொறுக்கமாட்டானிறே.

விளக்கம் – (வேண்டித் தேவர் இரக்க வந்து பிறந்ததும்) - தேவர்கள் இரங்கியபடி நின்றபோது, அதற்காக வந்து பிறந்ததும். தேவர்கள் இவனிடம் சென்று விண்ணப்பிம் செய்ததைக் கூறுகிறார். தேவர்கள் இவனிடம், "எங்களுடைய அளவு அறியாமல் ஒருவனுக்கு நாங்கள் வரம் கொடுத்தோம். அவன் உயர்வதையும் கண்டோம். எங்களுக்கு வாழ்வு இப்போது அரிதாகிவிட்டது", என்று வறுமையை வெளிப்படுத்தும் உடைகளை அணிந்து சென்று கூறினார்கள். அப்போது, பாலகாண்டம் (15-30) - பிதரம் ரோசயாமாஸ - தந்தையாக அடையவேண்டும் என்று இராமன் விரும்பினான் - என்பது போன்று, தான் விருப்பம் கொண்டு வந்து பிறந்தான். அல்லது, கீதை (4-6) – ஆத்ம மாயயா - எனது மாயையால் - என்பதற்கு ஏற்ப அவதரித்தான்; அதாவது தனது இச்சையால் பிறந்தான். "மாயை" என்ற பதம், இச்சையைக் கூறும் என்பதற்கு ப்ரமாணம் "மாயா வயுநம் ஜ்ஞாநம் -மாயை என்பது ஞானத்தை உணர்த்தி, அதன் மூலம் பிறக்கும் இச்சை" என்பதாகும்.

தேவர்கள் பலரும் "ஈச்வர: அஹம் - நானே ஈச்வரன்" என்று உள்ளனர்; அவர்களுடைய அந்த அஹந்தையைக் காணாமலும், தனது பெருமையை ஆராயாமலும் வந்து பிறந்தான்; இது அல்லவோ ஆழ்வாரை வருத்தியபடி உள்ளது. தான் இரந்து நின்று மற்றவர்கள் கார்யம் செய்பவன், மற்றவர்கள் தன்னிடம் இரந்தால் பொறுக்கமாட்டான் அல்லவோ?

வ்யாக்யானம் - (பிறந்ததும் வீங்கிருள்வாய்) "மத்ய ராத்ரே கிலாதாரே ஜாயமாநே ஜநார்த்தநே" என்னும்படியிறே. "இவனும் விழுக்காடறியாதே யகப்பட்டுக் கொடு நின்றான், கம்ஸ பயமும் ப்ராப்தமாயிரா நின்றது. இருளாலேயிறே நாம் பிழைத்தது! இனி இவ்விருளைச் சாணம் புகுமித்தனையிறே" என்று பிள்ளையுறங்காவில்லிதாஸர் பணிப்பராம். "ஊரெல்லாந் துஞ்சி"யில் கூற்றமான இருள் இவர்க்கு இப்போது ஆதரத்துக்கு விஷயமாயிற்றிறே. வீங்கிருள் வாய் பூண்டன்றன்னை புலம்பப் போய் என்றுமாம். "மக்களறுவரைக் கல்லிடை மோத விழந்தவள்" என்கிறபடியே பெற்றுப் பெற்று இழந்தவளாகையாலே, இவனையும் இழக்கிறோமோ!" என்று விரஹகாதரதையாலே காலைப் பூண்டு கிடந்து கூப்பிடப் போய். பிள்ளைபக்கல் வாத்ஸல்யத்தாலே இவள் கூப்பிட, இவன் முலைச் சுவடறியாமையாலே போனபடி. வீங்கிருள் – வளர்கிற இருள்.

விளக்கம் – (பிறந்ததும் வீங்கிருள்வாய்) - வளர்ந்தபடி உள்ள இருளில் வந்து பிறந்தான். இதற்கான ப்ரமாணம் ஸ்ரீவிபு. (5-3-7) – மத்ய ராத்ரே கிலாதாரே ஜாயமாநே ஜநார்த்தநே – அனைத்து ஜகத்திற்கும் ஆதாரமான ஜநார்த்தனன் ஒரு இரவில் அவதரித்தான் - என்பதற்கு ஏற்ப அல்லவோ பிறந்தான்? இருள் என்று கூறாமல் "வீங்கு இருள்" என்று ஏன் கூறவேண்டும் என்றால், "இவன் அடுத்து வரக்கூடிய செயல் அறியாமல் வந்து அவதரித்தான். கம்சனுடைய பயமும் நமக்கு உண்டானபடி உள்ளது. இருள் உள்ளதால் அல்லவோ நாம் பிழைத்தோம். இனி இந்த இருளை நாம் சரணம் புகவேண்டும்" என்று பிள்ளைஉறங்காவில்லிதாஸர் கூறுவார். "ஊரெல்லாம் துஞ்சி" என்ற திருவாய்மொழியில் "வீங்கு இருளின் நுண் துளியாய்" என்று இருளுக்கு அச்சம் கொண்ட விதத்தையும், இங்கு அந்த இருளைக் கொண்டாடியபடியும் உள்ளதை எண்ணுகிறார். "ஊரெல்லாம் துஞ்சி" என்ற திருவாய்மொழியில், யமன் போன்று புலப்பட்ட இருளானது, இப்போது ஆதரத்திற்கு விஷயமாக உள்ளது; இங்கு "வீங்கிருள் வாய் பூண்டன்றன்னை புலம்பப் போய்" என்று கூட்டிப் பொருள் கொள்ளலாம். க்ருஷ்ணனுடைய

திருவடிகளில் ஏன் புலம்பினாள்? பெரியாழ்வார் திருமொழி (5-3-1) – மக்களறுவரைக் கல்லிடை மோத விழந்தவள் – என்பதற்கு ஏற்ப, பெற்றுப் பெற்றுப் பல குழந்தைகளையும் இழந்தவள் என்பதால், “இவனையும் இழந்து விடுவோமோ” என்ற விரக பயத்தால் க்ருஷ்ணனுடைய திருவடியைப் பிடித்து அழைப்பதாகக் கருத்து. இவள் அழைப்பதற்கும், அவன் அங்கிருந்து சென்றதற்கும் காரணம் கூறுகிறார்; இவள் தனது வாத்ஸல்யத்தால் அழைத்தபடி உள்ளாள், அவன் தாய்ப்பால் என்றால் என்ன என்பதையே அறியாத காரணத்தால் சென்றான். வீங்கிருள் என்றால் வளர்ந்தபடி உள்ள இருள்.

வ்யாக்யானம் - (அங்கோராய்க்குலம் புக்கதும்) அவ்வவஸ்த்தையிலே இடையிலே வளருகைக்கு ஓர் அஞ்சினான் புகலிடமுண்டாவதே! (ஆய்க்குலம்) “கம்ஸன் பாதகன்” என்று பயப்படவறியாதவர்கள். “குடிவாய் உடன்படவிருந்தானாகில் இருக்கிறான், இல்லையாகில் உழக்கோலாலே தகர்க்கிறோம்” என்றிருப்பர்கள். (காண்டலின்றி வளர்ந்து) கம்ஸனும் அவன் வரக் காட்டின பாதக வர்க்கமும் காணாதபடி வளரப் பெறுவதே! (கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும்) ஸ்ரீநாரதபகவான் அறிவித்த பின்பு ஒருபோது தாழாதே வந்து, அவன்தான் நினைத்த வஞ்சநையை அவன் தன்னோடே போக்கினதும். கம்ஸன் முடியும்படியாக வஞ்சநை செய்தது, ராமாவதாரம்போலே “செவ்வைப் பூசலல்லதறியேன்” என்றிராமையிறே. (ஈண்டு கானலற்றப் பெற்றேன்) தேவகியாரைப்போல ஸமகாலத்திலேயிருந்து பயப்படாதே, இப்போது பயங் கெட்டிருந்து அநுபவிக்கப் பெற்றேன். ஈண்டு - இப்போது. (எனக்கென்ன இகலுளதே) கம்ஸன் பட்ட பின்பு எனக்கு சத்ருக்களுண்டோ? இகல் - சத்ரு. கம்ஸனை முடித்தபடியை இன்று இருந்து அனுபவிக்கப் பெற்ற எனக்கு இனி ஒரு மிடியில்லை என்றாராகவுமாம்.

விளக்கம் - (அங்கோர் ஆய்க்குலம் புக்கதும்) - அந்த நிலையில் இடையில் வளர்வதற்கு ஏற்ற ஒரு புகலிடம் உண்டாயிற்று. (ஆய்க்குலம்) – “கம்சன் பாதகம் செய்பவன்” என்று அச்சம் கொள்ள அறியாதவர்கள். அவர்கள், “கம்சன் நம்முடைய மக்களுடன் ஒத்துப் போவதாக இருந்தால் தப்பித்தான். இல்லையாகில் உழக்கோல் கொண்டு தகர்த்து விடுவோம்”, என்றனர். (காண்டல் இன்றி வளர்ந்து) - கம்சனும், அவன் வரும்படிச் செய்த தீயவர் கூட்டமும் காண இயலாதபடி இவன் வளரப் பெறுவதே! (கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும்) - நாரதபகவான் கம்சனிடம் சென்று க்ருஷ்ணன் உள்ள இடத்தைத் தெரிவித்தவுடன், சற்றும் காலதாமதம்

செய்யாமல் அங்கு வந்து, கம்சன் தான் எண்ணியுள்ள வஞ்சனையைக் காண்பிக்க முனைந்தபோது, அந்த வஞ்சனையைக் கொண்டே கம்சனை முடித்ததும். ஆனால் கம்சனை ஏன் வஞ்சித்து முடிக்கவேண்டும்? காரணம், "நேர்மையான யுத்தம் அன்றி வேறு ஏதும் அறியேன்" என்றுள்ள இராமாவதாரம் போன்று இல்லாத காரணத்தால் ஆகும். (ஈண்டு கானலற்றப் பெற்றேன்) - தேவகியைப் போன்று க்ருஷ்ணன் இருந்த காலத்தில் நான் இருந்து, அவள் கொண்டிருந்த அச்சம் போன்று நான் கொள்ளாமல், இப்போது பயம் அகன்றுள்ள காலத்தில், அவனை அனுபவிக்கப் பெற்றேன். ஈண்டு என்றால் இப்போது. (எனக்கு என்ன இகல் உளதே) - கம்சன் அழிந்த பின்னர் எனக்குச் சத்ருக்கள் உள்ளனரோ? அல்லது, கம்சன் முடிந்த விதத்தை இன்று அனுபவிக்கப் பெற்ற எனக்கு, ஒரு மிடியில்லை என்கிறார் என்றும் கொள்ளலாம்.

6-4-6. இகல் கொள் புள்ளைப் பிளந்ததும் இமில் ஏறுகள் செற்றதுவும்
உயர் கொள் சோலைக் குருந்து ஒசித்ததும் உட்பட மற்றும் பல
அகல் கொள் வையம் அளந்த மாயன் என்னப்பன் தன் மாயங்களே
பகல் இராப் பரவப் பெற்றேன் எனக்கு என்ன மனப் பரிப்பே

பொருள் - யுத்தத்தில் ஈடுபட்டு வந்த பகன் என்ற அசுரனுடைய வாயைக் கிழித்ததும்; செருக்கிற்குக் காரணமான திமில்களைக் கொண்ட எருதுகளை யுத்தத்தில் கொன்றதும்; உயர்ந்து ஓங்கித் தழைத்து நின்ற குருந்த மரத்தினை முறித்ததும்; இப்படியாக மேலும் பலவிதத்தில் உள்ள விரோதிகளைப் போக்கியதும்; இந்தத் தன்மைகள் கொண்டவனும்; மிகுந்த பரப்பளவு கொண்ட பூமியை அளந்து மஹாபலியின் கர்வத்தை அழித்து வியப்பை அளிக்கவல்ல த்ரிவிக்ரமனும், அந்தந்த அவதாரங்களுடைய ஐக்யத்தை எனக்கு வெளிப்படுத்தியவனும், எனக்கு உபகரகனும் ஆகிய கிருஷ்ணனுடைய வியக்க வைக்கும் லீலைகளை, பகல் இரவு என்னும் வேறுபாடுகள் இன்றி நான் துதிக்கப் பெற்றேன். என் மனதில் என்ன துக்கம் உள்ளது!

அவதாரிகை - க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அனுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு மநோது:க்கமில்லை யென்கிறார்.

விளக்கம் – "க்ருஷ்ணனுக்கு விரோதிகளாக வந்து நின்ற சத்ருக்களை அவன் முடித்த வரிசையை அனுபவிக்கப் பெற்ற எனக்கு எந்த ஒரு மன துக்கமும் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்) இகல் – யுத்தம். கேவலம் புள் மாத்ரமாய் வந்து தோற்றுகையன்றிக்கே, யுத்தோந்முகமாய்க் கொண்டு எதிரிட்ட புள்ளை நிரஸித்ததும். அசுராவேசத்தோடேவரச் செய்தேயும் "பாதிக்க வருகிறது" என்று பிறரஞ்சாத வடிவு கொண்டு வந்தபடி. பெரியாழ் (2-5-4) "பள்ளத்தில் மேயும் பறவையுருக் கொண்டு" வந்து. (இமிலேறுகள் செற்றதும்) ககுத்தையுடைத்தான வ்ருஷபங்களைச் செற்றதும். (உயர்கொள் சோலைக் குருந்தொசித்ததும்) ஓக்கத்தை யுடைத்தாய்ச் சோலை செய்து நின்ற குருந்தை முறித்ததும். "முக்தராயிருப்பார்க்கு ஆகர்ஷகமாயிருக்கும்" என்று தழைத்து நின்றது; "இனியித்தை முறித்துக் கார்யங் கொள்வோம்" என்று பொடிபடுத்தினான்.

விளக்கம் – (இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்) - இகல் என்றால் யுத்தம். புள் என்று மட்டும் கூறாமல் "இகல் கொள் புள்" என்று ஏன் கூறினார்? வெறும் பறவையாக மட்டும் வந்து தோன்றாமல், யுத்தத்தைச் செய்வதற்காக வந்து எதிரில் நின்ற பறவையை அழித்ததும். அசுரர்களுக்கு ஏற்ற வேகத்துடன் வந்தபோதிலும், "இது நம்மைத் துன்புறுத்த வருகிறது" என்று மற்றவர்கள் அச்சம் கொள்வதற்கு அவசியம் இல்லாதபடியாக உருவம் எடுத்து வந்தது. அஞ்சாதபடியான ரூபம் கொண்ட வந்தது என்பதற்கு ப்ரமாணம், பெரியதிருமொழி (2-5-4) - பள்ளத்தில் மேயும் பறவையுருக் கொண்டு - என்பதாகும். (இமிலேறுகள் செற்றதும்) - திரண்ட திமில் கொண்டதான எருதுகளை வீழ்த்தியதும். (உயர்கொள் சோலைக் குருந்தொசித்ததும்) - உயர்ந்து நிற்பதான சோலைகளாக நின்ற மரங்கள் நடுவில் நின்ற குருந்த மரத்தை முறித்ததும். அந்த அசுரன் ஏன் சோலை மரமாக நின்றான் என்றால், "இளைஞர்களுக்கு சோலையானது வசீகரம் செய்வதாக இருக்கும்" என்பதாக எண்ணினான்; ஆகவே இங்கு தழைத்து நின்றான்; இவன் "இதனை முறித்து நாம் வந்த கார்யத்தை முடிப்போம்", என்று பொடியாக்கினான்.

வ்யாக்யானம் - (உட்பட மற்றும் பல) இப்புடையிலே மற்றுமுண்டான ப்ரதிகூல நிரஸநங்கள் அநேகமிறே. (அகல்கொள்வையமித்யாதி) பரப்பையுடைத்தான பூமியடங்கலும் அநாயாஸேக வளர்ந்த ஆச்சர்யபூதனான உபகாரகனுடைய ஆச்சர்ய சேஷ்டிதங்களையே. (பகலிராப் பரவப் பெற்றேன்) நாட்டார் அபிமத

விஷயங்களை புஜிக்கைக்கு "பகல் இரா" என்று கூறிட்ட காலம் இரண்டும் இவ்விஷயத்திலே அனுபவிக்கப் பெற்ற எனக்கு, இரவுபகல் புறம்பே விஷயங்களை யநுபவிப்பாருடைய மநோது:க்கமுண்டோ? பரிவென்று து:கம். அதிலே ஒரு ஒற்றெழுத்தேறினாலும் அவ்வர்த்தத்தையே காட்டக்கடவது.

விளக்கம் – (உட்பட மற்றும் பல) - இந்தவிதமாக மேலும் உண்டான சத்ருக்கள் பலர் அல்லவோ? (அகல்கொள்வையமித்யாதி) - மிக்க பரப்பு கொண்ட இந்தப் பூமி முழுவதையும், மிகவும் எளிதாக ஓங்கி வளர்ந்து அளந்த வியக்க வைக்கும் செயல்கள் கொண்ட உபகாரனுடைய ஆச்சர்யம் அளிக்கவல்ல லீலைகளைக் குறித்து மட்டுமே. (பகலிராப் பரவப் பெற்றேன்) - உலகில் உள்ளவர்கள் தங்களுக்கு விருப்பமான விஷயங்களை அனுபவிப்பதற்கு “பகல், இரவு” என்று இரண்டாகக் காலத்தைப் பிரிந்தனர்; அந்தக் காலங்கள் இரண்டும் இந்த பகவத் விஷயத்தையே அனுபவிக்கப் பெற்ற எனக்கு, மற்ற விஷயங்களை மட்டுமே அனுபவித்தபடி உள்ளவர்களுடைய மன துக்கம் உள்ளதோ? பரிவு என்பது துக்கம். பரிவு என்பதில் ஒரு எழுத்து மேலே சேர்த்து “பரிப்பு” என்று காணப்பட்ட போதிலும், அதே பொருளையே தருவதாகும்.

6-4-7. மனப் பரிப்போடு அழுக்கு மானிட சாதியில் தான் பிறந்து
தனக்கு வேண்டு உருக் கொண்டு தான் தன சீற்றத்தினை முடிக்கும்
புனத் துழாய் முடி மாலை மார்பன் என் அப்பன் தன் மாயங்களே
நினைக்கும் நெஞ்சு உடையேன் எனக்கு இனி யார் நிகர் நீள் நிலத்தே

பொருள் – ஸம்ஸாரிகள் அடையும் துக்கத்தைக் கண்டு பொறுக்க இயலாதபடி உள்ள தனது நெஞ்சத்தில் மிக்க துக்கத்துடன், தாழ்ந்த மனித குலத்தில், தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ள அவன் பிறந்தான். இவ்விதம் மனிதர்களுடைய குலத்தில் பிறந்தபோதிலும், தனக்கு விருப்பமான ரூபமாக உள்ள திருமேனிகளைக் கொண்டான். அடியார்கள் மீது மிக்க வாத்ஸல்யம் கொண்ட அவன், அவர்களுடை விரோதிகளை அழிப்பதன் மூலம் தனது சீற்றத்தை முடிப்பவனாக உள்ளான். தனது நிலத்தில் நின்றது போன்று அழகு பெற்ற துளசி மாலையைக் கொண்ட திருமுடியையும், அந்த மாலையைக் கொண்ட திருமார்பையும் உடையவனாக, அந்த அழகை எனக்கு வெளிப்படுத்திய உபகாரகனுடைய வியக்க வைக்கும் லீலைகளை எப்போதும் எண்ணும்படியானா

சிறந்த நெஞ்சத்தைக் கொண்ட எனக்கு இந்தப் பரந்த பூமியில் ஒப்பாக யார் உள்ளார்கள்?

அவதாரிகை - ப்ரதிகூலர் ஆச்ரிதரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து அவர்களையழியச் செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூமியில் நிகரில்லை யென்கிறார்.

விளக்கம் – "தனது அடியார்களை அவர்களுடைய விரோதிகள் துன்புறுத்துவது கண்டு பொறுக்க இயலாமல் அவதரித்து, அந்தச் சத்ருக்கள் அழியும்படியாகச் செய்யும் லீலைகளை எண்ணும் நெஞ்சம் கொண்ட எனக்கு இந்தப் பூமியில் யாரும் நிகர் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (மனப்பரிப்போடு அழுக்கு மானிடசாதியில் தான் பிறந்து) நாட்டாரை அழுக்குடம்பு கழிக்கும் தான்கிடீர் அழுக்கு மானிடசாதியிலே வந்து பிறந்தான். ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் எடுக்க வருந் தாய் நெஞ்சு நொந்து வந்து எடுக்குமாபோலே, "இவற்றுக்கு உதவப் பெற்றிலோம்" என்னும் திருவுள்ளத்தில் தளர்த்தியோடே வந்து பிறக்கை. (தான் பிறந்து) - ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடே கர்ப்பவாஸம் பண்ணிக் கொண்டவதரித்து; பிறக்கைக்குக் கர்மம் பண்ணி வைத்தவருங்கூட அருவருக்கும் ஜந்மத்திலே கீடீர் அகர்மவச்யனான தான் பிறந்தது; இதுக்கடி காருண்யமிறே.

விளக்கம் - (மனப்பரிப்போடு அழுக்கு மானிடசாதியில் தான் பிறந்து) - "தாழ்ந்த இந்த சரீரத்தை விலக்கித் தரவேண்டும்" என்று ப்ரார்த்திக்கும் முமுக்ஷுக்களுடைய அழுக்கு உடம்பைக் கழிக்கும் தான், இந்த அழுக்கு மனித குலத்தில் வந்து பிறந்தான். தனது குழந்தை கிணற்றில் விழுந்தால், அதன் தாயானவள் தனது நெஞ்சம் நொந்து ஓடி வந்து எடுப்பது போன்று, "தனக்கு மட்டுமே வசப்பட்டு நிற்க வேண்டிய தகுதி கொண்டதாக உள்ளபோதிலும் துன்பத்தில் உள்ள இவர்களுக்கு நாம் உதவவில்லை" என்று தனது திருவுள்ளத்தில் தளர்த்தியுடன் வந்து பிறந்தான். (தான் பிறந்து) - தாழ்ந்தவற்றுக்கு எதிர்த்தட்டாக உள்ளவனும், கர்மத்திற்கு வசப்படாமல் உள்ளவனும் ஆகிய அவன் இந்த உலகில் காணக்கிடைக்காத திவ்யமான அமைப்புடன் கூடியவனாக, கர்ப்பவாசம் செய்து, இங்கு அவதரித்து. மனிதர்களாக உள்ளவர்கள், பிறப்பதற்கு ஏற்ற கர்மங்களைச் செய்து இங்கு வந்து

பிறந்தபோதிலும், இத்தகைய பிறவியை எண்ணி அருவருக்கும்படி உள்ளனர். அப்படிப்பட்ட ஜன்மத்தில் அல்லவோ, கர்மவசப்படாமல் உள்ள அவன் வந்து அவதரித்தான்? இதற்குக் காரணம் அளவு கடந்த கருணை அல்லவோ?

வ்யாக்யானம் - (தனக்கு வேண்டுருக் கொண்டு) அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தானத்தை யுடையனாய்க் கொண்டு. அப்படி பிறந்தால் ஒருபடிப்பட்டிருக்கப் பெற்றோமோ! "த்விபுஜோ வா சதுர்ப்புஜோ வா" என்னும்படியிறே பட்டபடி. ஈச்வரத்வத்தைக் கைகழிய விட்ட பின்பிறே இவனுக்கு இங்கு இடங் கொடுத்தது. இவைதான் ஆச்ரிதார்த்தமாகையாலே தனக்கு அபிமதமாயிருக்கும். ஐச்ச்சமென்றுமாம்.

விளக்கம் – (தனக்கு வேண்டுருக் கொண்டு) - இவ்விதம் ப்ரக்ருதியின் தொடர்பு அற்றதான திவ்யமான திருமேனி அமைப்பு கொண்டவனாக. இவ்விதமாகப் பிறந்தபோதிலும் ஒரே போன்று இருப்பதாக நாம் காண்கிறோமோ என்றால் இல்லை; "த்விபுஜோ வா சதுர்ப்புஜோ வா - இரண்டு தோள்கள் கொண்டவனா அல்லது நான்கு தோள்கள் கொண்டவனா" என்று வியக்கும்படியாக அல்லவோ உள்ளான்? ஆனால், நான்கு தோள்கள் கொண்டவன் இரண்டு தோள்கள் கொண்டவனாக ஏன் மாறினான் என்றால் "ஸம்ஸாரத்தின் கொடுமை" என்று கூறுகிறார்; ஈச்வரத்தன்மையை இவன் விட்ட பின்னர் அல்லவோ இந்த ஸம்ஸார பூமி இவனுக்கு இடம் அளித்தது! ஆனால் இவ்விதம் இரண்டு தோள்கள் கொண்டவனாக தான் மாறியதில் இவனுக்கு வருத்தம் இல்லையோ என்றால், தனது அடியார்களுக்காக இவ்விதம் செய்வதால், தனக்கு அந்தச் செயல் விருப்பமான ஒன்றாகவே இருப்பதாகும். அல்லது தனது இச்சையால் செய்தான் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (தான் தனசீற்றத்தினை முடிக்கும்) ஆச்ரித விரோதி போக்கினானாயிருக்கை யன்றிக்கே தன் சினம் தீர்ந்தானா யிருக்கை; மாதாவானவள், ப்ரஜையை நலிந்தவர்களைத் தான் நலிந்து தன் சினந் தீருமாபோலே. "கோபஸ்ய வசமேயிவாந்". (புனத்துழாய் முடிமாலை மார்பன்) ஆச்ரித விரோதிகளைப் போக்கித் திருமஞ்சனம் பண்ணியொப்பித்து, திருமேனியின் ஸ்பர்சத்தாலே தன் நிலத்திலே நின்றாப் போலே செவ்வி பெற்றிருக்கிற திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலுமுடையனாய், அவ்வொப்பனையாலே என்னையெழுதிக் கொண்டான். (தன் மாயங்களே

நினைக்கும் நெஞ்சுடையேன்) "காரணம் பந்த மோக்ஷயோ" என்று பொதுவாகையன்றிக்கே, அவனுடைய ஆச்சர்ய சேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடையேன். (எனக்கு இனி யார் நிகர் நீள்நிலத்தே) பூமி பரப்புடைத்தென்னா, எனக்கு ஒப்பாருண்டோ? பரமபதத்தையொன்றாக நினைக்கிறிலர்; தம்மைப் போலே கவி பாடி அடிமை செய்வாரில்லாமையாலே ஸம்ஸாரத்தேயிருந்து கவி பாடி அடிமை செய்யப் பெற்ற எனக்கு, பூமியில் ஓர் எதிருண்டோ? என்கிறார்.

விளக்கம் – (தான் தனசீற்றத்தினை முடிக்கும்) - அடியார்களுடைய விரோதிகளைப் போக்குதல் மட்டும் அல்லாமல், தனது சீற்றத்தையும் தணித்துக் கொண்டான்; இதற்கு உதாரணம் காண்பிக்கிறார்; தாயானவள் தனது குழந்தைக்குத் துன்பம் ஏற்படுத்தியவர்களை நலிந்து தனது கோபத்தைத் தீர்ப்பது போன்று இவனும் செய்கிறான். ஆனால் அடியார்களுடைய விரோதிகளைத் தனது விரோதிகளாக எண்ணிச் சீறிய இடம் உள்ளதோ என்றால், யுத்தகாண்டம் (50-130) - கோபஸ்ய வசமேயிவாந் – இராவணனால் தாக்கப்பட்ட காரணத்தால் ஏற்பட்ட புண்களுடன் நின்ற அனுமனை நோக்கியவுடன் இராமன் சீற்றத்தின் வசப்பட்டான் - என்பதாகும். (புனத்துழாய் முடிமாலை மார்பன்) - அடியார்களுடைய விரோதிகளை அழித்து, திருமஞ்சனம் செய்து கொண்டு, ஒப்பனை செய்து, தனது திருமேனியின் ஸம்பந்தம் காரணமாக, தனது நிலத்தில் நிற்பது போன்று அழகு பெற்ற துளசிமாலையைத் திருமுடியின் திருமார்பிலும் வைத்துக் கொண்டு, அத்தகைய ஒப்பனை மூலமே என்னைத் தனக்கென்று எழுதி எடுத்துக் கொண்டான். (தன் மாயங்களே நினைக்கும் நெஞ்சுடையேன்) – ஸ்ரீவிபு. (6-7-28) – காரணம் பந்த மோக்ஷயோ – மனமே பந்தத்திற்கும் அதிலிருந்து விடுதலைக்கும் காரணமாக உள்ளது - என்று கூறுவதற்கு ஏற்ப, எனது மனம் பொதுவாக இருப்பதில்லை. அவனுடைய வியக்கவைக்கும் லீலைகளையே எப்போதும் எண்ணியபடி உள்ளது. இப்படிப்பட்ட மனம் கொண்டேன். (எனக்கு இனி யார் நிகர் நீள்நிலத்தே) – இந்தப் பூமியில் உள்ள முழு பரப்பையும் நோக்கினாலும், எனக்கு நிகரானவர்கள் யாரேனும் உள்ளனரா? பரமபதத்தை ஒன்றாக எண்ணவில்லை. தம்மைப் போன்று கவிதை பாடி அடிமைத்தனம் செய்பவர்கள் இல்லை என்பதால், "ஸம்ஸாரத்தில் இருந்தபடி, கவி பாடி, அடிமைத்தன்மை அடைந்த எனக்கு, இந்தப் பூமியில் யாரேனும் நிகராக உள்ளனரா?", என்கிறார்.

6.4.8. நீள் நிலத்தொடு வான் வியப்ப நிறை பெரும் போர்கள் செய்து
வாணன் ஆயிரம் தோள் துணித்ததும் உட்பட மற்றும் பல
மாணி ஆய் நிலம் கொண்ட மாயன் என் அப்பன் தன் மாயங்களே
காணும் நெஞ்சு உடையேன் எனக்கு இனி என்ன கலக்கம் உண்டே

பொருள் - பெரிய நிலத்துடன், ஆகாயமும் வியப்படையும்படியாக, பாணன் மட்டுமே எதிரில் நிற்பவனாக உள்ளபோது, அவன் படைத்துணைக்கு வந்த தனித்தனி முதன்மையானவர்களாகிய ருத்ரன், சுப்ரமணியன் போன்ற பலருடன் பரிபூர்ணமான மஹாயுத்தங்கள் செய்து, பாணனுடைய ஆயிரம் தோள்களையும் வீழ்த்தியதும்; இது முதலான பலவாக உள்ளவற்றைச் செய்தவனாக; பிக்ஷை கேட்டு ப்ரம்மச்சாரியாக வந்து இந்தப் பூமியை வஞ்சகமாக, மீண்டும் எடுத்துக்கொண்டவனாக, அத்தகைய வஞ்சனையை எனக்கு வெளிப்படுத்தியவனாக உள்ள உபகாரகனாகிய க்ருஷ்ணனுடைய மாய லீலைகலை எப்போதும் கண்டு அனுபவிக்கும் நெஞ்சத்தை உடைய எனக்கு இனி என்ன கலக்கம் உள்ளது?

அவதாரிகை – பாண விஜய ப்ரமுகமான க்ருஷ்ண சேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு ஒரு கலக்கமில்லை என்கிறார்.

விளக்கம் – "பாணனை வெற்றி கொண்டது தொடக்கமான க்ருஷ்ணனுடைய பல லீலைகளை எப்போதும் எண்ணியபடி உள்ள நெஞ்சம் கொண்ட எனக்கு எந்தக் கலக்கமும் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (நீள்நிலத்தொடுவான் வியப்ப) பூமியிலுள்ளாரோடு ஸ்வர்க்கத்தி லுள்ளாரோடு வாசியற விஸ்மயப்பட. கண்டதுக்கெல்லாம் ஆச்சர்யப்படும் மநுஷ்யரோடொக்க, ஒன்றுக்கும் விக்ருதராகாதே தந்தாமைப் போரப் பொலிய நினைத்திருக்கும் தேவர்களும் விஸ்மயப்படும்படி. கும்பிடுவாரோடு கும்பீடு கொள்வாரோடு வாசியறும்படியாக. "வியப்ப" என்று மேலே கிடக்கையாலே, "மஞ்சா: க்ரோசந்தி" போலேயிருக்கிறது.

விளக்கம் – (நீள்நிலத்தொடுவான் வியப்ப) - இந்த நிலத்தில் உள்ளவர்கள் மற்றும் ஸ்வர்கத்தில் உள்ளவர்கள் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் வியப்பு கொள்ளும்படியாக. இவர்களுக்குள் என்ன வேறுபாடு உள்ளது? பார்ப்பவை

அனைத்தையும் கண்டு மனிதர்கள் வியப்பர்; எதற்கும் மாற்றம் அடையாமல் தங்களைப் பற்றி மட்டுமே எண்ணியபடி உள்ள தேவர்கள்; இவர்கள் இருவரும் வியப்படையும்படியாக, வணங்குபவர்களுடன் சேர்ந்து வணங்கப்படுவர்களும் வியப்படையும்படியாக. “வியப்ப” என்று கூறப்படுவதால், “ மஞ்சா: க்ரோசந்தி - கட்டில்கள் ஓசை இடுகின்றன” என்பது போன்று, “நிலம் மற்றும் வான்” என்பதன் மூலம் அங்குள்ளவர்கள் கூறப்பட்டு, அவர்கள் வியப்படைவதாகக் கருத்து.

வ்யாக்யானம் - (நிறை பெரும் போர்கள் செய்து) குறைவற்ற மஹாயுத்தத்தைப் பண்ணி, அதாவது, ஈச்வராபிமாநிகளான ருத்ராதிகளும் கெட்டோடும்படியான போரைச் செய்து. (வாணனாயிரந்தோள் துணித்ததும்) வகாத விஷயங்களை அநுவர்த்தித்த தோள்களைக் கழித்தபடி. “இவன் கரபாதை ஆற்ற மாட்டாமல் கண்டார் காலிலெல்லாங் குனிந்து திரியா நின்றான்” என்று அக்கரத்தைக் கழித்து விட்டான். (வாணனித்யாதி) “கைகழியப் போய் ருத்ரனை யாச்ரயித்தான். இவன் கரபாதை யாற்றாமை” என்று அத்தைப் படைக்கடைத்து விட்டான். (வாணனித்யாதி) வாணன் “தேவதாந்தர பஜநம் பண்ணுகையிறே அவனுக்கு இங்ஙன் கைபிழைப்பாடு வந்தது” என்று நாட்டார் கைவந்தபடி செய்கைக்காகச் செய்தான். “ஈச்வராய” என்றிறே தேஹஸம்பத்தியைக் கொடுத்தது. ஈச்வரன் கைவந்தபடி செய்யாதவர்களைக் கைமேலே தண்டிக்கை ப்ராப்தமிறே. ஸர்வேச்வரன் தன்னை ஆச்ரயிக்கைக்காக இவனோடே கைசெய்திறே அடியிலே விட்டது. “அத்தை மதித்திலன், இவன் அறக்கை விஞ்சினான்” என்று தண்டித்துவிட்டான். தேவதாந்தரத்தை ஆச்ரயித்துக் கையிலே பலம் பெற்றுவிட்டான். பகவத் ஸமாச்ரயணம் பண்ணுகைக்குக் கைம்முதலில்லாமை விட்டானன்றே. (உட்பட மற்றும் பல) அவனுக்குப் பெருநிலை நின்றாரையும் முதுகு காட்டும்படி பண்ணுவித்தபடி; “க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ” என்று பின்பிறே அவன் இவனை யுள்ளபடி யறிந்தது.

விளக்கம் - (நிறை பெரும் போர்கள் செய்து) - எந்தவிதமான குறையும் இன்றி பரிபூர்ணமாக யுத்தத்தைச் செய்து. அதாவது ஈச்வரனுடைய அபிமானிகளாக உள்ள ருத்ரன் போன்றவர்களும் கெட்டு ஓடும்படியான யுத்தம் செய்து. (வாணனாயிரந்தோள் துணித்ததும்) - தலையை அறுக்காமல் ஏன் தோள்களை வெட்ட வேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார்; ஸம்பந்தம் இல்லாத விஷயங்களின் பின்னே சென்ற தோள்களை வெட்டினான். ஏன் ஸம்பந்தம் இல்லாத விஷயங்களைப் பாணன் பற்றினான் என்றால், போர் ஏதும் இல்லாமையாலும், தோளில் ஏற்பட்ட கொழுப்பின் மிகுதியாலும் ஏற்பட்ட

செருக்கு காரணமாக ஆகும். “இவன் தனக்கு ஏற்பட்ட கரங்களைக் கொண்டு இறை வழிபாடு செய்யாமல், காண்பவர்கள் கால்களில் குனிந்தபடி உள்ளான்” என்று அங்கங்களை வெட்டினான். (வாணன் இத்யாதி) - “இவன் தனக்கு ஏற்பட்ட கரங்களைக் கொண்டு இறை வழிபாடு செய்யாமல், ருத்ரனை அண்டினான்” என்பதாக அந்தக் கைகளைத் தனது சக்ரத்திற்கு இரையாக்கினான். (வாணன் இத்யாதி) – “வாணன் மற்ற தேவதைகளை வணங்கினான் அல்லவோ? இதனால் அவனுடைய கைகளும் அவனை விட்டுச் சென்றன!”, என்று நாட்டில் உள்ளவர்கள் நோக்கி, அவர்கள் தங்கள் கைகள் படைக்கப்பட்ட பயனைப் பெறும்படியாகச் செய்தான்.

வ்யாக்யானம் - (மாணியாய் நிலங் கொண்ட மாயன்) பெறில் ஜீவிப்பானாய்ப் பெறாவிடில் முடிவானாம்படியாய், இரப்பிலே தழும்பேறின வடிவைக் கொண்டு. இவர் அவ்வவதாரத்தில் கால்வாங்குகிறாரல்லர்; கண்ணழிவற்ற அழகாலும், வரையாதே யெல்லாரையும் தீண்டுகையாலும், ஆச்ரித விஷயத்தி லோரத்தாலும், செய்யும் ஆனைத்தொழில்களாலும் க்ருஷ்ணாவதாரத்தோடு ஒத்திருக்கையாலே ஸ்ரீவாமநாவதாரத்தை அநுபவிக்கிறார். (நிலங் கொண்ட மாயனென்னப்பன்) “திருவுலகளக்க” என்று ஒரு வ்யாஜத்தையிட்டு அளந்து கொண்டது தம்மையென் றிருக்கிறார்.

விளக்கம் – (மாணியாய் நிலங் கொண்ட மாயன்) - “மஹாபலியிடமிருந்து தானம் பெற்றால் பிழைத்தோம் இல்லையென்றால் முடிந்தோம்” என்பதாக, யாசகம் செய்வதில் கைத்தேர்ந்தவனாக உள்ள ரூபத்தைக் கொண்டு. க்ருஷ்ணனை மட்டுமே எப்போதும் எண்ணியபடி உள்ள இவர், வாமன அவதாரம் நோக்கி ஏன் செல்லவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; இவர் வாமன அவதாரத்தில் நிலை நிற்பவர் அல்லர்; குறை ஏதும் இல்லாத அழகு, அனைவரையும் ஒரே போன்று கொண்டு அனைவருடைய தலைகளிலும் திருவடியை வைத்த தன்மை, அடியார்கள் விஷயத்தில் உள்ள நிலை, யானை போன்ற செய்கைகள் என்பதாகப் பலவற்றிலும் அந்த அவதாரனமானது க்ருஷ்ணாவதாரத்தைப் போன்று காணப்பட்டதால், அந்த அவதாரத்தை அனுபவிக்கிறார். (நிலங் கொண்ட மாயன் என்னப்பன்) - “இந்த உலகை அளத்தல்” என்பதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு அளந்து கொண்டது நம்மாழ்வாராகிய தன்னையே ஆகும் என்று உள்ளார்.

வ்யாக்யானம் - (அப்பன் தன் மாயங்களே காணும் நெஞ்சுடையேன்) " 'முடியானேயிற் கரணங்களையுடைய ஆழ்வாராகையாலே நெஞ்சு தானே நினைக்கவும் வற்றாய்க் காணவும் வற்றாயிருக்கும்' என்று பிள்ளான் பணிக்கும்" என்றருளிச்செய்வர். அதவா, "கட்கண்" என்றும், "உட்கண்" என்றும் சொல்லுகிறபடியே நெஞ்சு தன்னையும் கண்ணாகச் சொல்லக் கடவதிறே; அதாகவுமாம். (எனக்கினி யென்ன கலக்கமுண்டே) "இவ்விஷயத்தைக் காணப் பெற்றிலோம்" என்கிற கலக்கம் எனக்குண்டோ? அதவா, தேவதாந்தரங்களை "ரக்ஷகர்" என்றிருக்கிற கலக்கமும், ஈச்வரனுடைய ரக்ஷணத்திலே அதிசங்கை பண்ணும் கலக்கமும், "தானே தனக்குக் கடவன்" என்னும் கலக்கமும் இல்லை.

விளக்கம் - (அப்பன் தன் மாயங்களே காணும் நெஞ்சுடையேன்) – நெஞ்சத்தால் காண இயலுமா என்பதற்கு விடை அளிக்கிறார். பிள்ளான், " 'முனியானே' என்ற திருவாய்மொழியில் உள்ளது போன்று இந்த்ரியங்களைக் கொண்டவர் இந்த ஆழ்வார் என்பதால், இவருடைய நெஞ்சம் நினைப்பதையும் செய்யும், காண்பதையும் செய்யும்" என்று கூறுவார்", என்று சிலர் உரைப்பர். அல்லது பெரியதிருவந்தாதி (28) – கட்கண் … உட்கண் – என்று கூறுவதற்கு ஏற்ப நெஞ்சத்தையும் கண்களாகக் கூறலாம் அல்லவோ? அது போன்று கொள்க. (எனக்கு இனி என்ன கலக்கம் உண்டே) – "இந்த விஷயத்தை நான் காண இயலவில்லை" என்ற கலக்கம் எனக்கு உண்டோ? இல்லை. அல்லது, "மற்ற தெய்வங்கள் காக்கும் என்ற கலக்கம், ஈச்வரனுடைய காப்பாற்றும் தன்மையில் சந்தேகம் கொள்ளும் கலக்கம், நாமே நமக்குக் காப்பு என்பதான் கலக்கம்", போன்ற எதுவும் இல்லை.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்